1971 டிசம்பர் 17]

திரு. எம். சுரேந்திரன் : சார், சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்ருலும், அதைத் தளர்த்தப் படவேண்டிய அவசியம் பற்றிச் சொன்னுர்கள். அதே போன்று, தமிழ் நாட்டில் பேருந்துகளை தயாரிக்கும் போதும், கோடைகாலத்திற்கு மட்டுமின்றி, மழை காலத்திற்கும் ஏற்றவை களாகச் செய்ய அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஜீப் பேருந்து பணி

* 539 வினு—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மலைப்பகுதிகளுக்கு போக்குவரத்து ஏற்பட தனியார் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ "ஜீப் பஸ் சர்வீஸ்" விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களுக்கும், மலைப் பகுதிகளுக்கும் சாதாரண வழித்தடங்கள் இல்லாத காரணத்தால், ஜீப் பஸ் சர்வீஸ் என்கிற சிறிய பஸ்களை விட ஏற்பாடு செய்தால், கிராம மக்களுக்கும், மலைவாசிகளுக்கும் வசதியாக இருக்கும். அந்த வகையில் அரசு அமுல் படுத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் அத்தகைய ஜீப் பஸ்கள் விட அனுமதி வழங்கப்பட்டது. அதிலுள்ள கஷ்டம் என்னவென்ருல், போதிய ஜீப்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் வருவாயும் கிடைக்காததால், அவ்வளவாக இன்றையதினம் உரிமையாளர் களால் மேற்கொள்ளப்படாத சூழ்நிலை இருக்கிறது.

பழைய பேருந்துகளுக்கு பதில் புது பேருந்துகள்

* 540 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

வழித்தட எண். 80, 131, 101 ஆகியவற்றில் ஓடும் மிகப் பழைய வண்டி களை மாற்றி புது வண்டிகள் ஓட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து வழித்தட எண்கள் 80, 101, 131 ஆகியவற்றில் ஓடும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் பழைய வண்டிகள் அல்ல. அரசு வரையறுத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளை ஒட்டி 1973 மே திங்கள் முதல் 1975 ஏப்ரல் வரை உள்ள கால அளவில்தான் இவை மாற்றப்படவேண்டியவையாகும்.